# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

ஆணை நாள் 10.11.2020

முன்னிலை

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7685/B/2019**

திரு. R. நாகராஜன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மேற்கு வட்டம்,
சேலம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.R. நாகராஜன் மற்றும் பொது தகவல் அலுவலர், திருமதி. சாஜிதாபேகம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சேலம் மேற்கு வட்டம், சேலம் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 26.3.2019 தேதியிட்ட மனுவில், வீட்டு கடன் வாங்கியது தொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கு வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், சமர்ப்பித்த ஆய்வறிக்கையின் நகல் கடன்தாரர்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியோரிடம் பெறப்பட்ட விசாரணை அறிக்கையின் விபர நகல் ஆகியவற்றை தகவலாக 5 இனங்களில் கோரி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சேலம் மேற்கு வட்டம், சேலம் மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. பொது தகவல் அலுவரால் கொடுக்கப்பட்ட தகவல் திருப்தியளிக்காத காரணத்தால், மனுதாரர், 03.06.2019 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து தகவல் பெறப்படாததால் தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 29.07.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின்போது, பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு உரிய தகவலை உடனடியாக இரண்டு நாட்களுக்குள் அறிவுறுத்தப்பட்டார். பொது தகவல் அலுவலர், 11.11.2020 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தகவல் வழங்கி, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். **அதனை பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அவர் கோரிய தகவல் வழங்கப்பட்டது என்பதை ஆணையம் ஏற்று, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA/7685/2019</u>**

பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சேலம் மேற்கு வட்டம்,
சேலம் மாவட்டம்.

மனுதாரர்
திரு.ஆர்.நாகராஜன், த/பெ ராமசாமி,
159/12, நாகர்கோவில் வட்டம்,
சின்னமாரியம்மன் கோவில் அருகில்,
தளவாய்ப்பட்டி அஞ்சல்
சேலம் - 636 302.

Copy to: File
SSPA-17.11.2020